செ.வெ.எண்.66 நாள்.21.01.2011

<u>செய்தி வெளியீடு</u>

இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் போராடி உயிர் நீத்த தன்னலம் கருதாத் தியாகிகளை நினைவு கூறும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் சனவரித் திங்கள் 30–ஆம் நாளன்று காலை 11.00 மணிக்கு நாடு முழுவதும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. அவ்வகையில் இவ்வாண்டு 30.1.2011 (ஞாயிற்றுக் கிழமை) அன்று இந்திய நேரப்படி காலை 11.00 மணியிலிருந்து இரண்டு நிமிடம், நாடு முழுவதும் உள்ள அனைத்து அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டு இந்த மௌன அஞ்சலி செலுத்தப்படும். தொழிற்சாலைகள், கல்வி நிலையங்கள் மற்றும் பிற இடங்களில் பணி புரிபவர்களுக்கு ஏதுவாக வசதியுள்ள இடங்களில் அந்த நேரத்தை உணர்த்திட சங்கொலி / மணியொலி எழுப்பப்படும். அப்போது, ஆங்காங்கே நின்று, இரண்டு நிமிடம் மௌனம் அனுசரிக்குமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த ஆண்டு 30.01.2011 (ஞாயிற்றுக் கிழமை) அன்று அரசு விடுமுறை என்பதால், சென்னை தலைமைச் செயலகத்திலுள்ள இராணுவ அணி வகுப்பு மைதானத்தில் 28.1.2011 அன்று (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி அளவில் “தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழி”யினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் செய்து வைப்பார்கள். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலக அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்பார்கள்.

எஸ். மாலதி
தலைமைச் செயலாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.